1972 ஆகஸ்டு 9]

இணைப்பு I

(18 ஆம் பக்கத்திலுள்ள 8 ஆம் எண்ணுள்ள உட்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) இதுவரை மனிதர்களுக்கு பிளேக் நோய் ஏற்பட்டிருப்பதாக அரசுக்கு எவ்வித செய்தியும் இல்லை.

(உ) இறந்த எலிகளின் எச்சங்களை (smears) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆய்வுக் கூடத்திலும், குன்னூர் பாஸ்டர் நிலையத்திலும் நுண்ணுயிரியல் சோதனை செய்து பார்த்ததில் பிளேக் கிருமிகள் போன்றவை இருக்கக் காணப்பட்டன. கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் பிளேக் தோன்றக்கூடிய அபாயப் பகுதி என அறிவித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு வெளியிட்டார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மற்ற பகுதிகளிலும் எலிகள் விழுந்ததாலும், கிண்டி கிங் நிறுவனத்தில் 3,000 கன சென்டிமீட்டர் பிளேக் தடுப்பு அம்மைப் பால் மட்டும் இருந்ததாலும் மைய அரசின் வழியாக வெளிநாட்டிலிருந்து 85,000 டோஸ்கள் பிளேக் தடுப்பு அம்மைப்பால் வரவழைக்கப்பட்டது. முறையே 1.5 இலட்சம் கன சென்டிமீட்டர், 3 இலட்சம் கன சென்டி மீட்டர் பிளேக் தடுப்பு அம்மைப்பாலை அனுப்பி வைக்குமாறு பம்பாய் அஃப்கின் நிறுவனமும், பெங்களூர் மக்கள் நல்வாழ்வு நிறுவனமும் வேண்டப்பட்டன. இதுவரை அவ்விரு நிறுவனங்களிலிருந்தும் 92,000 கன சென்டி மீட்டர் பிளேக் தடுப்பு அம்மைப்பால் பெறப்பட்டுள்ளது.

திருப்பூரில் 20—1—1972 வரை 7,373 பேர்களுக்கு பிளேக் தடுப்பு அம்மைப்பால் குத்தப்பட்டது; 16,582 வீடுகளுக்கு மருந்து தெளிக்கப்பட்டது

மாநிலத்தில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ. 1,82,000 செலவில் மருந்துகளும் இரசாயனங்களும் வாங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. 9—1—1972-க்குப் பின்னர் திருப்பூரில் எலி விழுந்ததாகச் செய்தியேதுமில்லை.

நிலைமை தற்போது கட்டுக்கடங்கியுள்ளது.